DEREK
PRINCE
MINISTRIES - INDIA



Free Copy

நம்பிக்கை

– Part Four

நம்பிக்கை இரட்சிப்பின் பகுதியாக உள்ளது

இத்தொடரின் முந்திய அறிமுகவுரைகள் ஒவ்வொன்றிலும், என் தனிப்பட்ட வாழ்வில், நம்பிக்கையின்மையோடு எனக்கிருந்த போராட்டத்தை குறித்து நான் சுருக்கமாக பகிர்ந்துள்ளேன். நான் ஒரு முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவனும், வேத போதகனாயும் இருந்த போதிலும், இப்படிப்பட்ட வேதனைக்கு நான் விதிவிலக்கு பெற்றவனாக இருக்கவில்லை. ஆகவே, அநேக கிறிஸ்தவர்கள் அதே தீவிர போராட்டத்தில் இன்றும் இருக்கின்றனர் என்பது ஆச்சரியம் அளிக்கும் ஒன்றல்ல.

மனித வாழ்வில் நம்பிக்கையின்மை என்பது, மிக கவலையளிக்கும் நிலைகளில் ஒன்றாகும். ஆனால் உண்மையான வேதாகம நம்பிக்கை அனுபவிப்பது சாத்தியமே என்று நான் நம்புகிறேன். ஏன்? ஏனென்றால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மூலமாய், கிறிஸ்து இயேசுவின் நம்முடைய இரட்சிப்பின் ஒரு பகுதியாகவே நம்பிக்கை இருக்கிறது! வேத வசனங்கள் மற்றும் என்னுடைய தனிப்பட்ட அனுபவத்திலிருந்து, நம்பிக்கையை குறித்த இந்த 4ம் கடிதத்தில் நான் உங்களுடன் பகிர்ந்துக் கொள்ள உள்ளேன்.

ஏழு அத்தியாவசிய உண்மைகள்

இத்தலைப்பில், கடந்த சில விவாதங்களில், நாம் உறுதி செய்துக்கொண்ட ஏழு வேதாகம உண்மைகளை சாராம்சமாய் எடுத்து கூறி, நாம் இந்த பகுதியை துவங்குவோம். முதலாவதாக, கிறிஸ்தவ வாழ்வில், நிலைத்திருக்கும் மூன்று உண்மைகள் உள்ளன: விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு. இவை ஒவ்வொன்றும் பயனுள்ள கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அத்தியாவசியமானவை. இரண்டாவதாக, நம்பிக்கை, புதிய பிறப்பினால் உண்டாகிறது; இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினால், நாம் ஜீவனுள்ள நம்பிக்கையினுள் மறு பிறப்பு அடைந்துள்ளோம். மூன்றாவது உண்மை பின்வரும் வாக்கியத்தினால் விவரிக்கப்படும்: “நம்பிக்கை, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சார்ந்திருக்கிறது." நான்காவதாக, நம்பிக்கை, கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்குகிறது. உண்மையான எல்லா கிறிஸ்தவர்களுக்கும் முன் வைக்கப்பட்ட ஆனந்த பாக்கியம் இதுவே. ஐந்தாவதாக தேவனுடைய அன்பு தான் நம்பிக்கையின் ஊற்றாக இருக்கிறது. ஆறாவதாக, வேதாகம நம்பிக்கை, நம்மை பரிசுத்த வாழ்வு வாழ்வதற்கு ஊக்குவிக்கிறது. ஏழாவதாக, இத்தகைய நம்பிக்கை, திடனுள்ள, பிரகாசமான கிறிஸ்தவர்களை உறுவாக்குகின்றனது.

இவ்வுண்மைகள் மிகவும் முக்கியமானவை, ஆகையால் மறு பரிசீலனைக்காக அவைகளை இங்கு பட்டியலிடுகிறேன் :

> முதலாவதாக, கிறிஸ்தவ வாழ்வில், நிலைத்திருக்கும் மூன்று உண்மைகள் உள்ளன: விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு.
>
> இரண்டாவதாக, நம்பிக்கை, புதிய பிறப்பினால் உண்டாகிறது.
>
> மூன்றாவதாக, நம்பிக்கை, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சார்ந்திருக்கிறது.

The Teaching Legacy of
DEREK PRINCE

Derek Prince Ministries - India
www.derekprince.in
Issue #018

நான்காவதாக, நம்பிக்கை, கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்குகிறது.

ஐந்தாவதாக, தேவனுடைய அன்பு தான் நம்பிக்கையின் ஊற்றாக இருக்கிறது.

ஆறாவதாக, வேதாகம நம்பிக்கை, நம்மை பரிசுத்த வாழ்வு வாழ்வதற்கு ஊக்குவிக்கிறது.

ஏழாவதாக, இத்தகைய நம்பிக்கை, திடனுள்ள, பிரகாசமான கிறிஸ்தவர்களை உருவாக்குகின்றது.

அதிசயமான ஓர் உண்மை

நம்பிக்கை இரட்சிப்பின் அத்தியாவசிய பகுதியாய் ஏன் இருக்கிறதென்று, இச்செய்தியில் நான் விளக்குகிறேன். எந்த சபை பிரிவை சேர்ந்த கிறிஸ்தவர்களாய் இருந்தாலும், விசுவாசம் இல்லாமல் இரட்சிப்பில்லை என்ற உணர்வு இருக்கும். "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்ற பிரபலமான வேத அறிக்கையை நாம் அறிவோம். அது முற்றிலும் உண்மையே. ஆனால் அது முழுமையான உண்மையில்லை என்பது உங்களுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணலாம். இப்பாடத்தில், நம்பிக்கையில்லாமல், இரட்சிப்பை அடைய முடியாது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். நம்பிக்கை இரட்சிப்பின் அத்தியாவசிய பகுதியாய் இருக்கிறது.

ரோமர் 8:24-25ல் பவுல் கூறுகிறதை பார்ப்போம்:

> அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன?
>
> நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிற வதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்.

விசுவாசம் மற்றும் நம்பிக்கைக்கு உள்ள தொடர்பை குறித்து, இத்தொடரில், நான் முன்பு செய்த ஒரு முக்கிய குறிப்பை, இவ்வசனம் நமக்கு நினைப்பூட்டுகிறது. விசுவாசம் தற்சமயத்தில் உள்ளது. ஆனால் நம்பிக்கை நம்மை எதிர்காலத்திற்கு நேராக திருப்புகிறது. நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று பவுல் இங்கு கூறுகிறார். வேறு விதமாக சொல்ல வேண்டுமானால். நம்பிக்கை விசுவாசத்தின் இடத்தை எடுத்துக் கொள்வதில்லை - ஆனால் இரட்சிப்படைவதில் அது அத்தியாவசியமானது. நம்பிக்கையில்லாமல் நம்முடைய இரட்சிப்பு செல்லுபடியாகாது.

> *"நம்பிக்கை இல்லாமல், நம்முடைய இரட்சிப்பு செல்லுபடி ஆகாது"*

நம்பிக்கை பொறுமையை உண்டாக்குகிறதென்று, பவுல் இங்கு தொடர்ந்து சுட்டி காண்பிக்கிறார். "நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறவதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்." என்று கூறுகிறார். பொறுமையும் நம்முடைய இரட்சிப்பின் அத்தியாவசிய பகுதியாக உள்ளது. நம்முடைய விசுவாசத்தின் நிறைவு வரும்வரை, அந்த விசுவாசத்தில் நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும் என்று அநேக வேத பகுதிகள் வலியுறுத்துகின்றன. ஆகவே, நம்பிக்கையும் (அதினோடே பொறுமையும்) இரட்சிப்பிற்கு அத்தியாவசியமானவைகள்.

வெளிப்படுத்தப்பட்ட ஒரு பரம இரகசியம்

இரட்சிப்பிற்கு நம்பிக்கை அத்தியாவசியமானது - என்ற இவ்வுண்மையை, பவுல் தன்னுடைய எழுத்துக்களில், இன்னொரு பகுதியில் வெளிப்படுத்துகிறார். கொலோ.1:25-27ஐ புதிய ஏற்பாட்டின் மிக அழகான மற்றும் சுவாரசியமான பகுதிகளில் ஒன்றாக நான் கருதுகிறேன். புதிய ஏற்பாட்டில் அப்படிப்பட்ட அநேக அழகான மற்றும் சுவாரசியமான பகுதிகள் உண்டு!

பவுல் கூறுவது இது தான் :

> ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறை களுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

இதை வலியுறுத்தும்படி, அந்த கடைசி வசனத்தை மீண்டும் வாசிப்போம் :

> தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

இப்பகுதியில், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு (சபைக்கு) தேவனுடைய வார்த்தையை முழுமையாக அறிவிக்க தன்னை ஏற்படுத்தினார் என்பதை பவுல் கூறிக்கொண்டிருக்கிறார். தேவனுடைய வார்த்தையின் முழுமை என்றால் என்ன என்பதை அவர் தொடர்ந்து விளக்க ஆரம்பிக்கிறார். தேவனுடைய வார்த்தையின் அந்த சத்தியத்தின் முழுமையை முன் வைப்பதில் "ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறை வாயிருந்து" ஒரு "இரகசியம்: இணைந்திருக்கிறதென்று பவுல் கூறுகிறார்.

புதிய ஏற்பாட்டின் அக்காலக்கட்டத்தில், "இரகசியம்" என்ற கிரேக்க வார்த்தைக்கு ஒரு விசேஷித்த அர்த்தம் இருந்தது. இரகசியமான சடங்குகளால் மட்டும் உட்படக்கூடிய சில "இரகசிய மதங்கள்" அக்காலத்தில் இருந்தன. இரகசியமான சடங்குகள் மற்றும் உட்பிரவேசத்திற்கு உட்பட்டவர்கள் மட்டுமே அம்மதங்களினுள் அனுமதிக்கப்படுவர். ஆகவே "இரகசியம்" என்ற வார்த்தையை பவுல் பயன்படுத்தும் போது, புரிந்துக்

முகவரி மாற்றம்

முக்கியம்!!! முக்கியம்!!! முக்கியம்!!!

எங்கள் விலாசம் மாறியுள்ளது.

புதிய விலாசம்: DEREK PRINCE MINISTRIES - INDIA,

A40, Anna Nagar Main Road, Sivapragasam Salai, Trichy - 620 017.

கொள்ளவே முடியாத ஒன்றை குறித்து அவர் பேசவில்லை. அதை இன்னும் துள்ளியமாக சொல்ல வேண்டுமானால் - உட்பிரவேசித்தவர்களால் மட்டும் புரிந்துக் கொள்ளக்கூடிய ஒன்று என்று அதற்கு அர்த்தமாகும் - நிபந்தனையை நிறைவேற்றினவர்கள் மட்டும்.

இப்பதத்தை பயன்படுத்துவதினால், கிறிஸ்தவ விசுவாசம் ஒரு இரகசியத்தை அதினுள் கொண்டது என்பதை பவுல் வெளிப்படுத்துகிறார் - காலாகாலமாகவும், தலைமுறை தலைமுறையாகவும் மறைக்கப்பட்ட ஒன்று. ஆதிகாலத்தின் பெரிய மனிதர்களும், ஞானிகளும், இராஜாக்களும் அதிபதிகும், இந்த இரகசியத்தை அறிந்துக்கொள்ளவில்லை. தற்காலத்திலுள்ள நமக்காக அது வைக்கப்பட்டிருந்தது. மறைக்கப்பட்ட அது, இப்போது பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அது உங்களை உற்சாகப்படுத்துகிறதா? ஞானிகளுக்கு கூட வெளிப்படுத்தப்படாத ஒன்று - இன்றைக்கு நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கூட்டத்தில் இடம்பெற்றது மா பாக்கியமே.

மூன்று சுருக்கமான வார்த்தைகள்

தேவன் “அந்த மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று புறஜாதிகளுக்குள்ளே விளங்கப்பண்ண" விரும்புகிறார். இன்னும், கிரேக்கத்தில் அதை சொல்லுக்கு சொல் மொழியாக்கம் செய்தால் “இந்த இரகசியத்தின் மகிமையின் ஐசுவரியம்". இந்த இரகசியம் எவ்வளவு சுவாரசியமானது என்பதை விளக்கும் போது, கிட்டத்தட்ட பவுலுக்கு வார்த்தை இல்லாமல் போய்விடுகிறது. அந்த இரகசியம் என்ன?

இந்த கேள்விக்கான பதில் ஏதோ பெரிய, புரியாத வார்த்தைகள் கொண்ட இறையியல் கட்டுரையில் முன் வைக்கப்படவில்லை. நான் ஒரு தொழில்முறை தத்துவவாதியாக இருந்தபடியால், வேதத்தின் எளிமையை நான் வரவேற்கிறேன். இம்மானுவேல் கான்ட் என்ற தத்துவ ஞானியின் எழுத்துக்களை வாசித்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதிகமான இடங்களில் ஒரு வாக்கியம் இரண்டு பக்கங்கள் வரை முற்றுப்புள்ளியே இல்லாமல் தொடரும். நல்ல வேளை, வேதாகமம் இரகசியங்களை அப்படிப்பட்ட விதத்தில் வெளிப்படுத்துவதில்லை. நாம் தேடுகிற அந்த மகிமையின் இரகசியம் மூன்று சுருக்கமான வார்த்தைகளில் வெளிப்படுத்தப்படுகிறது.

அந்த இரகசியம் என்ன? கிறிஸ்து உங்களில் இருப்பது. மனுகுலத்திற்கு வெளிப்படுத்தப்படக்கூடிய மிக சுவாரசியமான சத்தியம் இதுதான்! பரிசுத்த ஆவியானவரின் மூலமாக தேவனுடைய நித்திய குமாரனாகிய இயேசு கிறிஸ்து நமக்குள் இருக்க முடியும் என்பதே. தனிப்பட்ட நபர்களாகிய நமக்குள்ளும் தேவனுடைய ஜனமாகிய நம்முடைய மத்தியிலும் இதுவே மகிமையின் நம்பிக்கை.

மகிமையின் நம்பிக்கை என்ன? உங்களில் கிறிஸ்து, என்னில் கிறிஸ்து. இது தான் இரகசியம் - தேவன் உங்களுக்கும் என க்கும் வைத்திருக்கும் பெரும் இரகசியம். நீங்கள் பாக்கியவான் என்பதை உணருகிறீர்களா? அதை குறித்து யோசிக்கும் போது உற்சாகம் அடைவதில்லையா? கிறிஸ்துவை உங்களுல் கொண்டிருப்பது என்ன என்பதை உணர முடிகிறதா? அப்படியானால் உங்களுக்கு மகிமையின் நம்பிக்கை இருக்கிறது.

இரண்டு சாத்தியக்கூறுகள் மட்டுமே

தங்களுக்குள் கிறிஸ்துவை பெற்றுக்கொள்ளாதவர்களை குறித்து என்ன? விசுவாசிகளாகிய நமக்கு இந்த மகிமையின் இரகசியம் என்ன அர்த்தம் கொண்டுள்ளதோ, அதற்கு மிகவும் மாறுபட்டதாகவே அது இருக்கிறது. கிறிஸ்துவுக்கு புறம்பிருப்போரின் நிலையை குறித்த பவுலின் தெளிவான விவரிப்பை குறித்து பார்க்கலாம். எபேசியர் 2:11-12ல், புறஜாதியானோருக்கு எழுதும்போது, கிறிஸ்து அல்லாமல் அவர்கள் வாழ்வு எப்படி இருந்ததென்று மறந்து போது வேண்டாம் என்று நினைப்பூட்டுகிறார் :

> ஆனபடியினால் முன்னே மாம்சத்தின்படி புறஜாதியாராயிருந்து, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்களென்னப்பட்ட நீங்கள், அக்காலத்திலே இயேசு கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பான வர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்.

எதிர்மறையான அந்த பட்டியலை கவனித்து பாருங்கள். எவ்வளவு கொடுரமான வார்த்தைகளாக இருக்கின்றன! "இயேசு கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும்" (உங்களுடைய நாடு அல்லாத ஒரு நாட்டில் அயல்நாட்டவராக இருந்திருக்கிறீர்களா? நான் இருக்திருக்கிறேன். அயல்நாட்டவராக இருப்பது என்ன என்பது எனக்கு தெரியும். நீங்கள் சொந்தம் கொண்டாடவே முடியாது.

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி secretary@derekprince.in அல்லது அலைபேசி 9585538202 தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் கவனத்திற்கு!!!

உங்கள் விலாசம் மாறும் பொழுது தயவு எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

ISSUE #019

இன்னும் தேவையா?

- ○ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்--பிரதிகள் தேவை.
- ○ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- ○ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

பதிவு செய்க!

- ○ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ○ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- ○ கடிதம் மூலமாக அனுப்பவும்.

கிறிஸ்து இல்லாமல் இருப்போரை குறித்து, பவுல் இதை தான் கூறுகிறார் - அவர்கள் அயல்நாட்டவர்; அவர்கள் சொந்தம் கொண்டாடக்கூடியவர்கள் அல்ல). ஆனால் அதில் கடைசி இரண்டு சொற்றொடர்கள் தான் துயர் ஏற்படுத்துபவையாக இருக்கின்றன: "நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாய்."

அந்த சொற்றொடர்களை மறுபடியும் சொல்ல அனுமதியுங்கள். அவைகளை உங்கள் சிந்தையில் நான் முத்திரை வெட்டாக பதியவைக்க விரும்புகிறேன். ஒருவேலை நீங்கள் இப்பிரிவில் இருக்கலாம் - இங்கு விவரிக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கலாம். அப்படியானால், இவைகளுக்கு நீங்கள் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

> இயேசு கிறிஸ்துவைச் சேராதவர்கள்,
> இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள்,
> வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்,
> நம்பிக்கையில்லாதவர்கள், இவ்வுலகத்தில் தேவனற்றவர்கள்

ஒவ்வொரு நபருக்கும் இரண்டு நிலைகளில் ஒன்றில் இருப்பதற்கு மட்டுமே சாத்தியக்கூறுகள் உள்ளன. கிறிஸ்து உங்களில் இருந்தால், உங்களுக்குள் மகிமையின் நம்பிக்கை இருக்கிறது. ஆனால் கிறிஸ்து இல்லாதிருந்தால், நீங்கள் நம்பிக்கையில்லாதவர்களும், தேவனற்றவர்களுமாய் இருக்கிறீர்கள்.

நம்பிக்கையின் அவசியம்

> *"நம்பிக்கை இல்லாமல், நமக்கு கிறிஸ்து இல்லை. கிறிஸ்து இல்லாமல் நமக்கு இரட்சிப்பு இல்லை."*

நம்பிக்கை நமது இரட்சிப்பின் ஒரு பகுதி என்பதை காண்பது ஏன் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் இப்போது காண முடிகிறது. நம்பிக்கையில்லாமல், நமக்கு கிறிஸ்து இல்லை. கிறிஸ்து இல்லாமல் நமக்கு இரட்சிப்பு இல்லை.

நம்பிக்கை, இரட்சிப்பிற்கு ஒரு பின் சேர்க்கை அல்ல. அது இரட்சிப்பின் அத்தியாவசியமான பகுதியாகும். நாம் நம்பிக்கையில் இரட்சிப்படைகிறோம்; இரட்சிப்பை கொண்டு வரும் விசுவாசத்தின் மீது தான் நம்பிக்கை கட்டப்பட்டிருக்கிறது - ஆனால் அது முழு தொகுப்பின் அத்தியாவசியமான பகுதியாகவும் உள்ளது. இந்த நம்பிக்கை நமக்கு இல்லையென்றால், நாம் கிறிஸ்து இல்லாதவர்களாக இருக்கிறோம். நாம் கிறிஸ்து அற்றவர்களாக இருந்தால், தேவனற்றவர்களாகவும் இருக்கிறோம். நாம் அயலகத்தாராக இருக்கிறோம். நாம் விலக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். நாம் பிரிந்தவர்களாக இருக்கிறோம். நம்பிக்கையற்றவர்களாக இருக்கிறோம். எவ்வளவு பயங்கரமான நிலை இது!

தேவனுக்கு ஸ்தோத்திரம் - இந்த செய்தியை கேட்கிற ஒருவரும் அந்த நிலையில் தொடர தேவையில்லை. உங்கள் வாழ்வை கர்த்தருக்கு ஒப்புவித்து, கிறிஸ்துவை நீங்கள் ஏற்றுக்கொண்டால், நீங்கள் கிறிஸ்து அற்றவர்களாக இருக்க மாட்டீர்கள். அப்போது நீங்கள் வேகமாக, உங்களுல் மகிமையின் நம்பிக்கையை பெற்றவர்களாக இருப்பதென்றால் என்ன என்பதையும் அறிந்துக்கொள்வீர்கள். நம்முடைய இரட்சிப்பை குறித்து, நாம் உறுதியுள்ளவர்களாக இருக்க, தேவன் நம் ஒவ்வொருவருக்கும் உதவி செய்வாராக.

உங்களை குறித்து என்ன? இவ்வார்த்தைகளை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்க கிறிஸ்து உங்களுல் இருக்கிறார் என்பதை உறுதி செய்ய விருப்பம் எழும்புகிறதா? நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்த "மகிமையின் நம்பிக்கையை" அனுபவிக்க விரும்புகிறீர்களா?

ஒரு வேளை நீங்கள் இன்னும் இயேசு கிறிஸ்துவையும் அவர் தரும் நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ள தீர்மானம் எடுக்காமல் இருந்திருக்கலாம். அல்லது அந்த தீர்மானத்தை செய்திருக்கும் நீங்கள் அதை உறுதி செய்து, இயேசு வாக்களிக்கும் அந்த நம்பிக்கையை பெற்றுக்கொள்ள விரும்பலாம்.

உங்கள் சூழ்நிலை எதுவாக இருந்தாலும், இந்த மறைபொருளான, மகிமையின் நம்பிக்கையினுள் பிரவேசிக்க, பின்வரும் வார்த்தைகளை கொண்டு ஜெபிக்கலாம்:

அன்புள்ள ஆண்டவராகிய இயேசுவே, உம்மை என் வாழ்வில் முழுமையாக நான் இப்போது பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். எனக்குள் வந்து, என்னுடைய முழு சரீரத்தையும் உமது நம்பிக்கையினால் - மகிமையின் நம்பிக்கையினால் ஆட்கொள்ளும். என் இருதயத்தை உமக்கு திறக்கிறேன் - முன்பு செய்ததை விட முழுமையாக. நீர் எனக்குள் வந்ததற்காக நன்றி - இனி உலகில் நம்பிக்கையில்லாமலும், தேவனில்லாமலும் நான் ஒருபோதும் இருப்பதில்லை.

இயேசுவின் நாமத்தில்.

ஆமென்.

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph : 9585538205
A40, ANNA NAGAR
MAIN ROAD,
SIVAPRAGASAM
SALAI, Trichy - 620017